
ஞாலகுருவின் படைப்புக்கள்

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,127 சித்திரை மாதம்

# இந்துக்களைக் காப்பாற்றும் ஆற்றல் தமிழ்மொழியில்தான் இருக்கின்றது!



பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி,
ஆதிசிவனாரின் நேரடிக் குருபாரம்பரிய வாரிசு,
இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை,
பரப்பிறம்மம், குருமகாசன்னிதானம்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள்.

இந்து இலக்கியக் கழக வெளியீடு

**43,73,127ஆம் ஆண்டின் சித்திரை மாத வெளியீடு**

***தலைப்பு:-*** **“இந்துக்களைக் காப்பாற்றும் ஆற்றல் தமிழ்மொழியில்தான் இருக்கிறது!”**

# உள்ளுறை

1. **“இந்துக்களை ஒற்றுமைப்படுத்துவது எப்படி?”** - திருமங்கலம் சங்கிலிச்சாமி சன்னிதானம் அவர்களுக்கு குருதேவர் அவர்களின் தலைமைப்பீடத்திலிருந்து விடுக்கப்பட்ட விளக்க அஞ்சல்.
2. **“இந்துமதமே உலகத்தில் அருளாட்சியை ஏற்படுத்தும்”** - இந்துவேதம் பரப்பும் நாயகத்திற்கு குருதேவர் அவர்களின் தலைமைப்பீடத்திலிருந்து விடுக்கப்பட்ட அஞ்சல்.
3. **“இந்துக்களைக் காப்பாற்றும் ஆற்றல் தமிழ்மொழியில்தான் இருக்கிறது”** - திருமங்கலம் சங்கிலிச்சாமி சன்னிதானம் அவர்களுக்கு குருதேவர் அவர்கள் தம் கைப்பட வரைந்த திருவோலை.
4. **“தமிழ்நாடுதான் இந்தியாவைக் காப்பாற்றும் திருநாடு”** - அருள்மிகு உதிரக்கருப்பு சன்னிதானம் திரு உலகதாசன் அவர்களுக்கு குருதேவர் அவர்களின் தலைமைப் பீடத்திலிருந்து விடுக்கப்பட்ட அஞ்சல்.

# இந்துக்களை ஒற்றுமைப்படுத்துவது எப்படி?

ஓம் குருவே துணை!

தலைமைப் பீடம்,
18-12-1994.

பெறுநர்:-

தென்மண்டலத் திருவோலை படியெடுக்கும் நாயகம்,
திருமங்கலம் சங்கிலிச்சாமி சன்னிதானம்,
சித்தரடியார் அ.த. முருகேசன்,
C/O த. கேசவன், 266 கீழவெளி வீதி, மதுரை - 625001.

பேரன்பிற்கும், பேரார்வத்திற்குமுரிய அன்பு சித்தரடியார் அ.த. முருகேசன் அவர்களுக்கு;

தங்களுக்கும் அங்குள்ள நமது இந்துவேதம் பரப்பும் நாயகம், அவரது இல்லத்தார், நமது இயக்கத்தார்கள், கழகத்தார்கள், நிறுவனத்தார்கள், ... முதலிய அனைவருக்கும் குருதேவர் வாழ்த்தையும் அன்பையும் குருதேவரின் சார்பாக தெரிவித்து பதினெண்சித்தர் மடம் அலுவலகப் பொறுப்பாளர் சித்தர் யோகமுனி விடுத்துக் கொள்ளும் திருவோலை!

(1) இனிய நண்பா!

இன்றுள்ள சூழ்நிலைகளை எண்ணி நமது குருதேவர் மிக மிகக் கவலையடைந்து அதன் பயனாக அனைத்துத் தொடர்புகளிலிருந்தும் விடுபட்டு அமைதியாகியுள்ளார். எல்லோருடனும் தொலைபேசி

தொடர்புகளிலிருந்து, அஞ்சல் தொடர்பு வரை எம்மையே நிகழ்த்தச் சொல்லி இருக்கிறார். எனவே, அதன்படி செயல்பட்டு வருகிறோம் யாம்!

(2) தாங்கள் எழுதக் கூடிய அஞ்சல்களின் வாசகங்கள், அவற்றின் வடிவமைப்பு, உணர்வு ஓட்டம், அன்பின் அருவி ஓட்டம், ... முதலியவைகள் குருதேவரிடம் மிகப்பெரிய நெகிழ்வை, ஆழமான நினைவை ஏற்படுத்தி இருக்கின்றன. எனவே, குருதேவரால் தங்களுக்கு திருவோலை அனுப்ப; திருவுளம் கொண்டு; திருவாய் மலர்ந்தருளிய செய்திகளின் சாரமாக இந்த அஞ்சலை எழுதுகிறோம் யாம்.

(3) குருதேவர் தமக்குக் கிடைத்துள்ள அடியான்கள், அடியார்கள், அடியாள்கள் அனைவரையுமே சமமாகத்தான் நினைக்கின்றார். எல்லோருக்குமே அருள்புரிந்து எல்லோரையுமே தயாரிக்க வேண்டும் என்று விரும்புகிறார். அதனால்! அதனால்!! அதனால்!!! யாரையுமே கோபித்திடவோ, கண்டித்திடவோ விரும்பவில்லை! விரும்பவில்லை!! விரும்பவில்லை!!! எனவேதான், குருதேவர் நம்மவர்களுடைய ஒற்றுமையில், தோழமையில், நட்பில், அன்பில் ஒருவரோடு ஒருவர் இணைந்து செயல்படுவதில், ஒருவரையொருவர் மதித்து மனம் திறந்து உரையாடி ஆக்கப் பணிகளை ஊக்கத்தோடு செய்வதில் இன்னும் நிறைவு ஏற்படவில்லை என்பதைக் கண்டறிந்து வருந்துகிறார்.

(4) ஏனெனில், நம்மவர்களுக்கிடையில் வசதி வாய்ப்புகள் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு போல்; மிகப் பெரிய வேறுபாடுகளை உடையவர்களே மிகுதியாக இருக்கிறார்கள். இதோடு நம்மவர்களுக்கிடையில் உலகியலாக உற்சாகத்தோடும், ஊக்கத்தோடும், துடிதுடிப்போடும் செயல்படுபவர்கள் மலைபோல் உயர்ந்து நிற்கிறார்கள். அதே நேரத்தில் பல்வேறு வகையான சூழ்நிலைகளால் செயல்படத் தெரியாமையால், அறியாமையால், புரியாமையால் செயல்படுவதில் மடு போல் இருக்கக் கூடியவர்களும் இருக்கிறார்கள்.

(5) ஆனால்! ஆனால்!! ஆனால்!!! நம்மவர்கள் எல்லோருமே அருளுலக தகுதிகளில் ஏறத்தாழ சமமானவர்களாகவே இருக்கிறார்கள். எனவே, குருதேவர் யாருக்கு என்ன அறிவுரை சொல்லுவது? என்ன கண்டிப்பை நல்குவது? எவர், எதை, எப்படிப் புரிந்து கொள்வார்கள்? என்பதையெல்லாம் எண்ணி, ... யாருக்கும், எதையும் சொல்லாமல்; சிறிது காலம் அவரவர் போக்கில், எல்லோரும் செயல்படட்டும் என்று விடுத்து, தாத்தாக்கள் ஆத்தாக்கள் அம்மையப்பன்கள் முதலியவர்களை வேண்டித் தொடர்ந்து பூசைகளை செய்து கொண்டுள்ளார்.

(6) இன்னும் ஒரு சில திங்களில், குருதேவர் முழுமையாக ஊர் ஊராக அருட்பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார். அதற்காக, தமிழ்நாட்டில் பரவலாக நமக்கு அறிமுகம் தேவை என்பதற்காகத்தான், **“ஐயப்பன் காயந்திரி மந்தர, மந்திர, மந்திற புத்தகத்தை”** ஒரு பத்தாயிரமாவது (10,000) மக்களுக்கிடையில் தவழுதற்குரிய ஏற்பாடு செய்தார். ஆனால், எதிர்பாராதவிதமாக இத்திட்டம் மிகப் பெரிய தோல்வியை அடைந்து விட்டது. இதுவும் “தாத்தாக்கள் ஆத்தாக்கள் அம்மையப்பன்களின் திருவிளையாடலே” என்று எண்ணி குருதேவர் அமைதி அடைந்துள்ளார்.

(7) பேரார்வமிக்க நண்பரே! மூன்று உகங்களிலும் மானுட இனத்திற்கு மிகச் சிறந்த துணையாக இருந்திட்ட **‘மனு நீதி நூல்களும்’, ‘இந்து வேத நூல்களும்’, ‘இந்து மத நூல்களும்’** இந்த நான்காவது உகத்தில் மக்களைச் சென்று அடைய முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. இதை எப்படிச் சீர் செய்வது? அல்லது சரி செய்வது? என்ற சிந்தனையில்தான் பத்தாவது, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகள் போராட்ட வாழ்வுகளை நிகழ்த்திச் சென்றிட்டார்கள். அவர்களின் வாரிசாக இன்று வாழும் நமது குருதேவராகிய பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி தமது செயல்திட்டங்களை

மக்களுக்கு அறிவிக்கும் முயற்சியிலேயே மாபெரும் தடைகளை, முடக்கங்களை, தேக்கங்களைப் பெற்றிருக்கின்றார். எனவேதான், தான் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் மிகமிக நிதானமாக, எச்சரிக்கையாக எடுத்து வைக்கிறார்.

(8) நமது குருதேவர் எதிரிகளை சந்திப்பதற்கு முன்; '<u>நம்மவர்கள்' என்று சொல்லிக் கொள்பவர்களையெல்லாம்</u> முழுமையாகச் சந்தித்து; அவர்களை எல்லாம் உரிய பக்குவத்தைப் பெறக் கூடியவர்களாக தயாரித்தேயாக வேண்டும் என்ற எண்ணத்தில்தான் அமைதியாகி இருக்கிறார்.

(9) இன்றைக்கு நமது குருதேவர் 'நமக்குக் கிடைத்துள்ளவர்களே போதுமானவர்கள்' என்ற நிறைவு பெற்றிருக்கின்றார். ஆனால், தமக்குக் கிடைத்துள்ளவர்களை எல்லாம்; ஒரு சில பயிற்சி முகாம்களின் மூலம், சிறுசிறு கூட்டங்களாகப் பிரித்து, உரிய பக்குவம் பெறுவதற்கு பயிற்சியளிக்கவே விரும்புகிறார். '<u>இதைச் செய்யாமல் மேற்கொண்டு செயல்படுவது வாய்க்கால் வெட்டாமல் கிணற்றிலிருந்து தண்ணீரை இறைத்து விட்டுக் கொண்டேயிருப்பது போன்றதாகி விடும்</u>' என்று முடிவு கட்டியுள்ளார்.

(10) இந்து வேதாகம பாடசாலைகள் ஆங்காங்கு வாரத்திற்கு ஒருமுறையோ அல்லது மாதத்திற்கு ஒருமுறையோ தொடர்ந்து 3 அல்லது 4 நாட்கள் மட்டும் நிகழ்த்தப்பட்டால்தான்; அவர்களை பகலில் பயிற்சிகளின் மூலமும், சொற்பொழிவுகளின் மூலமும் தயாரிக்க முடியும். மாலை நேரங்களில் பயிற்சி முகாம் நடக்கின்ற சுற்று வட்டாரங்களில்; நமது கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள், சொற்பொழிவுகள் நமக்குத் தேவையான சமுதாயச் சூழ்நிலைகளை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டிடல் வேண்டும். இது பற்றித் தங்களைப் போன்ற இளைஞர்களின் கருத்தையும், செயலாக்கச் சிந்தனைகளையும் தெரிந்து கொள்ள விரும்புகிறார் குருதேவர்.

(11) போருக்குப் போகிறவர்கள் தங்கள் கையில் உள்ள போர் ஆயுதங்கள், போர்க் கருவிகள், போர்ச் சாதனங்கள், ... முதலியவற்றை திண்மையும், நுண்மையும், மேன்மையான செப்பமும் உடையவைகளாக தயாரித்துக் கொள்ள வேண்டும். அதுபோல மக்களின் புரட்சிக்கு, தத்துவப் புரட்சிக்கு, சிந்தனேப் புரட்சிக்கு, அதுவும் கருத்துப் புரட்சிக்கு தயாரிப்புகள் செய்ய வேண்டுமென்ருல், முதலில் தொண்டர் படை அல்லது மூலப் படை ஒன்று ஒத்த கருத்துடையவர்களாக உருவாக்கப்பட்டேயாக வேண்டும். அவர்கள் அனேத்துப் புரட்சிகளுக்கும் அடிப்படையான வரலாறுகளேயும், இலக்கியங்களேயும் நன்கு தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். அத்துடன் அவர்கள் தங்களுக்கு தெரிந்ததை பிறருக்குப் புரிய வைக்கும் உரையாடல் நிகழ்த்தும் ஆற்றல் அல்லது சொற்பொழிவு நிகழ்த்தும் ஆற்றல் உடையவர்களாக இருத்தல் வேண்டும்; அல்லது மேற்படி ஆற்றல்களே உடையவர்களாகத் தயாரிக்கப்பட்டிடல் வேண்டும். இதற்காகத்தான் குருதேவர் இன்றுள்ள நம்மவர்களே நான்கைந்து பேர்களாக நேரில் வரவழைத்து தலேமைப்பீடத்தில் ஒருசில நாட்களாவது தங்க வைத்துப் பயிற்சி கொடுத்து அனுப்பலாமா? என்று எண்ணுகின்ருர். ஏனென்ருல் குருதேவர் சுற்றுப்பயணம் செய்ய முற்பட்டால் ஆங்காங்கே ஆயிரக் கணக்கில் செலவுகளாகி விடுகின்றன. எனவே, அதைத் தடுக்க விரும்புகிருர் குருதேவர்.

(12) தைப்பூசம் என்பது நாற்பத்தெட்டு வகைப்பட்ட கோயில்களிலும், அனேத்து வகைப்பட்ட ஆலயங்களிலும் உள்ள மூலவர்கள் அனேவர்களும் பொதுமக்களுக்காக மூலவர் சிலேகளில் இருந்து எழுந்தருளி சிலேகளுக்குள் நாளோலக்கமாக எழுந்தருளி நகர் வலம் வந்து திருவோலக்கம் புரிந்து அருள் வழங்குவார்கள். அந்த நன்ஞளிலேயே அருட்போருக்குரிய அருட்படை திரட்டும் பணி, பாடி வீடு அமைக்கும் பணி முதலியவைகளேத் துவக்கிட, கருவாக்கிட

திருவுள ஒப்புதல்களையும், குருவுளச் சம்மதங்களையும் பெற்றுள்ளார் நமது குருதேவர். அதற்கு முதல் கட்டமாக சென்னையில் மாதவரத்தில் அமைந்துள்ள இருக்கு வேத மாரியம்மன் கோயிலில் நமது அலுவலக வீட்டை கட்டும் பணி துவக்கப்பட இருக்கிறது.

(13) "தனக்கென தாழ்வாரம் இல்லாருக்கு
தேவாரம் எதுக்கடி குதம்பாய்"

என்று குதம்பை சித்தர் பாடியுள்ள பாடல்களுக்கு ஏற்ப! நமது இ.ம.இ., இ.மு.க., அ.வி.தி. .... முதலிய நிறுவனங்கள் அனைத்திற்கும் அலுவலகமாக, செயலகமாக சித்தர் தேரையரின் இடத்தில் கோயிலும், வீடும் ஒரு சேர அமைக்கப்படுகின்றன. அவர் தன்னுடைய கையிருப்பு அனைத்தையும் இந்து வேதத்திற்காக, இந்து மதத்திற்காக காணிக்கையாக்கி உள்ளார். அது சமயம் நம்மவர்களில் வசதியும், விருப்பமும் உடைய ஒரு சிலர் நேரில் வந்தால் குருதேவரை பார்க்கலாம். அதுவரை, குருதேவர் தமது பூசைகளில் தனித்த சூழ்நிலையில் இருக்கவே விரும்புகிறார். எனவே, நம்மவர்கள் ஐயப்பன் காயந்திரி மந்தர மந்திர மந்திற புத்தகத்தையும், மற்ற புத்தகங்களையும் அதிகமாக விற்பதில் அக்கறையும், ஆர்வமும், முயற்சியையும் காட்டிடுங்கள். அத்துடன் புதியவர்கள் பலரை நமது இ.ம.இ., இ.மு.க.வில் சேர்த்திடுங்கள்.

(14) நாம் புதிதாக மக்களிடையில் பத்தியை வளர்க்கத் தேவையில்லை! ஏனெனில் ஏறத்தாழ நம் நாட்டில் நூற்றுக்கு தொண்ணூற்றென்பது பேர்கள் ஆத்திகர்களாக, பத்தியாளர்களாக இருக்கிறார்கள்.

(15) நாம் புதிதாகத் திருநாள்கள், திருவிழாக்கள் என்று செய்து கோயில்களில் கூட்டங்கள் திரட்டத் தேவையில்லை. ஏனெனில், இன்றைக்கு நாட்டு நடப்பில் ஏறத்தாழ நம்முடைய இந்துக் கோயில்கள் அனைத்திலுமே செவ்வாய், வெள்ளி, ஞாயிற்றுக் கிழமைகளிலும்,

மற்ற திருவிழா திருநாள் காலங்களிலும் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டுதான் இருக்கின்றது; கோயில்களில் உண்டியல்கள் நிறைந்து வழிந்து கொண்டுதான் இருக்கின்றன.

(16) நாம் கூறித்தான் நம் மக்கள் விரதங்களேயோ, சடங்குகளேயோ, சாத்திற சம்பிறதாயங்களேயோ கடைப்பிடிக்க வேண்டியது என்ற நிலே நம் நாட்டில் இல்லே. ஏனெனில், திருமணம், குழந்தை பிறத்தல், குழந்தைகளே பள்ளியில் சேர்ப்பது, பெண் குழந்தைகள் பருவமடைவது, மனிதர்கள் இறப்பது, அவர்களுக்கு செய்யப்படுகின்ற கருமாதி, ... முதலிய அனேத்துமே பரம்பரையாக செய்து வருகின்ற பழக்க வழக்கப்படிதான், நெறிமுறை விதிப்படிதான்; குடும்ப ஆண்டவர், குலதெய்வம், கிராமத்து தேவர் தேவதை, நாட்டுக் கடவுளர் முதலிய அனேவருக்குமே உரிய படையல்களோடு பூசை செய்துதான் நிகழ்த்துகிருர்கள். அதாவது, நம் நாட்டில் நாத்திகமோ, பகுத்தறிவோ, சீர்திருத்தமோ, மதமறுப்போ, கடவுளர் வெறுப்போ... ஏட்டளவிலும், பேச்சளவிலும்தான் இருக்கின்றன.

(17) எனவே, **இன்றைக்கு உள்ள குறைபாடெல்லாம், நம் இந்துக்களில் ஏறத்தாழ எல்லோருமே அவரவருக்கு விருப்பமான ஏதாவது ஒரு கடவுளே அல்லது ஏதாவது ஒரு கோயிலே மட்டுமே விரும்பி; ஏற்று நம்பி, போற்றிப் புகழ்ந்து பூசை செய்து வாழுகின்றனர் என்பதுதான். இதனுல், நம் இந்துக்கள் "ஒரு மூட்டையில் இருந்து அவிழ்த்துக் கொட்டப்பட்ட நெல்லிக் காய்களேப் போல ஆளுக்கொரு திசையாக, பிடிவாதமாக வெறி நிறைந்த நோக்கோடும், போக்கோடும், மாற்ற முடியாத நம்பிக்கையோடும் தனித்து வாழ்ந்து கொண்டிருக்கிருர்கள்"**. எனவேதான், 'இந்து' என்ற தத்துவத்திற்கு, 'இந்து' என்ற செயல்சித்தாந்தத்திற்கு, 'இந்து' என்ற வாழ்வியல் நடைமுறைகளுக்கு, ... முறையான, நிறைவான, திட்டவட்டமான வடிவமைப்பு கொடுக்க முடியவில்லே. அதாவது,

இந்துக்களை ஒற்றுமைப்படுத்தவோ! ஒன்றுதிரட்டவோ! இயலவில்லை. இதற்கிடையில் நம் இந்துக்களில் சைவம், மாத்துவம், அத்வைதம், துவைதம், விசிட்டாத்வைதம் என்ற பல பெயர்களில் ஒருவருக்கு ஒருவர் பிரிவினையையும், வேற்றுமையையும், எதிர்ப்பையும் வளர்த்துப் போட்டி போட்டுப் போரிட்டுக் கொண்டிருக்கின்றன.

(18) இப்படிப்பட்ட கலக்கமான, குழறுபடியான தேக்க வீக்கங்கள் நிறைந்த நிலையில்தான்; நமது குருதேவர் இவையனைத்துக்கும் அரிய மருந்தாக மணுநீதியார் எனப்படும் அனுதிசிவன் அருளிய மணுநீதியையும்; இந்து வேத நாயகம், இந்து மதத் தந்தை எனப்படும் ஆதிசிவன் அருளிய இந்து வேதத்தையும், இந்து மத நூல்களையும் மக்களுக்கு வழங்கிட முன்வந்துள்ளார். அதாவது, நாயன்மார்களும், ஆழ்வார்களும், தொகையடியார்களும், சந்தான ஆச்சாரியார்களும், தாயுமானவர், பட்டினத்தடியார், அருணகிரியார், இராமலிங்க அடிகளார் போன்ற திருவருட் செல்வர்களும், சித்துவிளையாடல்காரர்களும், சாமியார்களும், சந்நியாசிகளும், முனிவர்களும், இருடிகளும், தவசிகளும், ஞானிகளும் கூற முடியாத இந்து வேதத்தை, இந்து மதத்தை, இம்மண்ணுலகுக்குரிய மணு நீதியை பன்னிரண்டாவது முறையாக நமது குருதேவர்தான் வழங்க முன் வந்திருக்கிறார். எனவே, நம் காலத்தில் நம் மக்களுக்கு ஒற்றுமை, அமைதி, நிம்மதி, நிறைவு, சமத்துவம், சகோதரத் தத்துவம் முதலியவைகளை வழங்குகின்ற வல்லமை, பெருமை, உரிமை நமக்குத்தான் உண்டு. இதை உணர்ந்து நாம் அனைவரும் நமது குருதேவருக்கு துணையாக, உதவியாக, ஏந்தாக செயல்பட்டேயாக வேண்டும். அதற்காக நமது குருதேவர் எதிர்பார்க்கின்ற பக்குவத்தை நாம் அனைவரும் பெற்றேயாக வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திடவே இந்நெடிய அஞ்சலை குருவுள ஒப்புதலோடு; குருவின் வாக்காக, குருவின் நோக்காக, குருவின்

போக்காக என்றல் முடிந்தவரை எழுதியிருக்கிறோம். உங்களைப் போன்றவர்களுடைய கருத்தையும் தெரிய விரும்புகின்றோம்.

உடன் பதில்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

**அன்பு**

**தலைமைப்பீட எழுத்தர்,**

**சித்தர் யோகமுனி,**

**19-12-1994.**

**நேரம்: அதிகாலை 5 மணி.**

நகல் தயாரிப்பு:-

தென்மண்டல திருவோலை படியெடுக்கும் நாயகம்,
திருமங்கலம் சங்கிலிச் சாமி சன்னிதானம்,
சித்தரடியான் அ.த. முருகேசன்.

** "இக்கட்டுரையை அனைவரும் படிக்க வேண்டுமென்பது அருளாணை பெற்ற குருவாணையாகும்"

\- **குருவாணை!** 21-12-1994.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: கையெழுத்துப் பிறதியாக இருந்தது.//**

# இந்துமதமே உலகத்தில் அருளாட்சியை ஏற்படுத்தும்!

ஓம் குருவே துணே!

பொன்னேரி,

24-12-1994.

அனுப்புநர்:-

சித்தர் அம்பலக்கூத்தர், பொறுப்பாளர்,

பதினெண்சித்தர் மடம், பொன்னேரி.

பெறுநர்:-

இந்துவேதம் பரப்பும் நாயகம் த. கேசவன்,

266, கீழவெளி வீதி, மதுரை - 1.

அருள்மிகு சமயக்குரவர் நால்வர் திருத்தோன்றல் சித்தர் வேதகணநாதர், இந்துவேதம் பரப்பும் நாயகம், த. கேசவன் B.Com., அவர்களுக்கு,

(1) தங்களுடைய அஞ்சல் 20-12-94 எழுதப்பட்டது இங்கு 23-12-94 அன்று கிடைத்தது. குருதேவருக்கு படித்துக் காட்டப்பட்டது.

(2) ஏற்கனவே, தாங்கள் ஐயப்ப காயந்திரி புத்தகத்தின் மூலமாக சிந்தை நலம், மன நலம், உடல் நலம் எல்லாம் குன்றி பாதிக்கப்பட்டு மிகவும் மெலிந்து காணப்படுவதாக தொடர்ந்து செய்திகள் குருதேவருக்கு வந்து கொண்டிருக்கிறது. பாலசுப்பிரமணியம் ஐயாவும், பெரியகுளத்து ஐயாவும் தங்களுடைய உடல்நலப் பாதிப்பு, மனநலப் பாதிப்பு, சிந்தை நலப் பாதிப்புகளுக்கு மிகவும் கவலே தெரிவித்துள்ளார்கள்.

(3) இப்பொழுது தாங்கள் எழுதிய அஞ்சல்படி தாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறீர்கள், வருத்தமுற்று இருக்கிறீர்கள், கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள், மனநிம்மதி இழந்திருக்கிறீர்கள், சிந்தை நைந்து, நொய்ந்து போயிருக்கிறீர்கள், மிகுந்த உடல்சோர்வைப் பெற்றிருக்கின்றீர்கள் .... என்ற உண்மைகள் தெரிவதாக குருதேவர் கூறினர். தங்களுக்காக குருதேவர் மிகவும் கவலைப்படுகிறார், வருத்தப்படுகிறார். தாங்கள் நிகழ்ந்து முடிந்தவைகளை ஏதோ ஒரு கனவாக நினைத்து மறக்க முயற்சி செய்யுங்கள். ஆனால், அது எளிதில் முடியாது என்று குருதேவருக்கும் தெரியும். காலம்தான் உங்களின் மனப்புண்ணை ஆற்ற வேண்டும். குருதேவர் உங்களைச் சந்திக்க விரும்பினாலும் தைப்பூசம் கழித்து ஜனவரி 18 தேதிக்கு மேல் மற்றவர்களைப் பார்க்க இயலும் என்ற நிலையில் இருக்கிறார்.

(4) என்றைக்கும் (A Known Devil is Better than an unknown Angel) என்ற முதுமொழியை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் நீங்கள் என்பதுதான் குருதேவரின் பரிந்துரை. ஏனெனில், இந்த உலகம் உள்ள அளவும் மானுட இனத்தின் ஒற்றுமை, தோழமை, சமத்துவம், சகோதரத்துவம், பொதுவுடமை, கூட்டுறவு வாழ்வு, குடும்ப வாழ்வு, அன்பு, இரக்கம், ஒருவருக்கொருவர் உதவுதல், .... முதலிய நல்ல பண்புகள் அனைத்தும் பிழைத்திட, தழைத்திட உதவிடும் மாபெரும் இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் பரப்பிடும் அரிய பெரிய பணியில் ஈடுபட்டிருக்கிறோம் நாம்.

நம்மை வழிநடத்தும் குருதேவரோ இதுவரையிலும் எந்த நாயன்மாரோ, ஆழ்வாரோ, அருளாளர்களோ இம்மண்ணுலகுக்கு வந்திட்ட அருளுலக வாரிசுகளோ, திருவருட் செல்வர்களோ ..... கூறிடாத, கூற முடியாத அரிய பெரிய பேருண்மைகளை மிகமிக எளிமையாகவும், தெளிவாகவும், இனிமையாகவும் எல்லோரும் தெரிந்து, புரிந்து, பயன்படுத்தி, பயனடையும் வகையில் ஏட்டறிவாகவும்,

பட்டறிவாகவும் (Both the Theoretical and Practical Knowledge) வழங்கிடும் எல்லாம் வல்ல சித்தராக, பரப்பிறம்மமாக, கருகுல ஆதீனமாக, கருமூலப் பண்டாரமாக, நான்குயுக நாயகமாக, அனாதி ஆதி சத்திகள் கடந்த தம்பிரான் அடிகளாராக, முத்தமிழ் தமிழ் ஞானசபைத் தலைவராக வாழுகிறார்! வாழுகிறார்!! வாழுகிறார்!!!

இவ்வுலகியல் வழக்கப்படி எந்தவொரு மகானும், ஞானியும், முனிவரும், இருடியும், மேதையும், அறிஞரும், விஞ்ஞானியும், பேரறிஞரும், ..... அவர்கள் வாழுகின்ற காலத்தில் அவர்களுடைய காலத்தவர்களால், அவர்களுடைய குடும்பத்தவர்களால், அவர்களுடைய உற்றார் உறவினர்களால், அவர்களுடைய நண்பர்களால், தோழர்களால், அவர்களுடைய தொண்டர்களால் கணிசமான அளவு கூடப் புரிந்து கொள்ளப்படுவதில்லை! புரிந்து கொள்ளப்படுவதில்லை!! புரிந்து கொள்ளப்படுவதில்லை!!! புரிந்து கொள்ளப்படுவதேயில்லை!!!!

(5) மேற்படி நிலை நமது குருதேவருக்கும் வந்து விடக் கூடாது என்றுதான் என்னைப் போன்றவர்கள் பயப்படுகிறோம். எனவே, தங்களைப் போன்ற மூத்த சன்னிதானங்கள்தான் அவ்வப்போது ஏற்படக்கூடிய தேக்க நிலைகள், வீக்க நிலைகள், கலக்க நிலைகள், குழப்ப நிலைகள், வீழ்ச்சி நிலைகள், .... முதலியவைகளையெல்லாம் எதார்த்தமானவைகளாக, சாதாரணமானவைகளாக மாற்றிட வேண்டும்! மாற்றிட வேண்டும்!! மாற்றிட வேண்டும்!!! இல்லாவிட்டால் நாம் நம் காலத்தில் குருதேவரை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிய மாபெரும் தவறைச் செய்தவர்களாவோம்.

அதாவது, முதலில் தமிழர்களை ஒன்று சேர்க்க, ஒற்றுமைப்படுத்த; தமிழர்களுக்கு மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று முதலியவற்றை ஏற்படுத்திட நமது குருதேவரால்தான் முடியும் என்பதை நாம்தான் முழுமையாக உணர்ந்து நம் தாயக மக்களுக்கு உணர்த்த வேண்டும்!

உணர்த்த வேண்டும்!! உணர்த்த வேண்டும்!!! உணர்த்தியே ஆக வேண்டும்!!!!

(6) இந்துமதம் மிக விரைவில் உலகம் முழுவதும் பரவி அருளாட்சியை ஏற்படுத்தும் என்ற பேருண்மை ஒரு பக்கம் இருக்கட்டும். நம்மைப் பொறுத்தவரை இந்துவேதக் கருத்துக்களும், இந்துமத வாழ்வியல் நடைமுறைகளும் நம்முடைய கிராமத்து மக்களுக்கு, சிற்றூர் பேரூர் மக்களுக்கு மட்டுமாவது மிகமிக விரைவில் புரிய வேண்டும், புரிய வைக்கப்பட்டாக வேண்டும்! புரிய வேண்டும், புரிய வைக்கப்பட்டாக வேண்டும்!! புரிய வேண்டும், புரிய வைக்கப்பட்டாக வேண்டும்!!!

இன்றைக்கு கலையுலகவாதிகள், இலக்கிய உலகவாதிகள் இருவருமே சமுதாயத்தையும், அரசியலையும்; எல்லாவகையான நெறி பிறழ்ந்த வெறிநிலைக்குக் கொண்டு போய் விட்டு விட்டார்கள். இது தொடர்ந்து கொண்டுதான் இருக்கும் என்ற நிலையே எல்லோருடைய நம்பிக்கையிலும் இருக்கிறது. எனவே, மதவுலக வாதிகளால்தான் இன்றுள்ள அனைத்தையும் செம்மைப்படுத்த முடியும், சீர்படுத்த முடியும். இதுதான் உண்மை! இதுதான் உண்மை!! இதுதான் உண்மை!!!

(7) இந்த உண்மையின்படி செயல்பட குருதேவர் விரும்புகிறார். அதற்கு உற்ற துணையாக நாம் எல்லாம் இருந்திட வேண்டும். ஆனால், நாமே தளர்ச்சியுற்று, கவலைப்பட்டு, கலங்கி, குழம்பி, தேங்கி, மயங்கி, சோர்ந்து நிற்கிறோமென்றால் நிலைமை என்னவாகும்?

(8) எனவே! எனவே!! எனவே!!! நமக்குள் புத்துணர்ச்சி, புதுவேகம், பேரார்வம், புதிய புதிய செயல்திட்டங்கள், புதிய புதிய அணுகுமுறைகள், புதிய புதியவர்களை சந்தித்தல் .... என்பன மலர வேண்டும்! மலர வேண்டும்!! மலர வேண்டும்!!!

(9) தாங்கள் கூறியுள்ளது போல் ஏற்கனவே அவைத்தலைவர் பொன்னுசாமி அவர்கள் தன்னிடம் Business Administration Courseக்காக வந்து சென்றிட்ட நூலகர்கள் (Librarians) பலரோடு தொடர்பு கொண்டு நமது புத்தக விற்பனைக்கு ஏற்பாடு செய்துள்ளார். ஆனால், இன்றுள்ள ஐயப்ப பத்தர்கள் மலைக்கு சென்று திரும்பி ஓய்வு பெறும்வரை நமது புத்தகங்களை ஐயப்ப பத்தர்களிடம் விற்கும் பணியைத்தான் செய்ய வேண்டும் நாம் என்பதே அருளாட்சி நாயகமான தஞ்சைத் தாத்தாவின் அருளாணை. ஏனென்றால், நமது கொள்கைகளையும், செயல்திட்டங்களையும் சிறப்பாக விளக்குவதுதான் இந்த திட்டம். இப்புத்தகத்தின் மூலம்தான் நமக்குப் பல புதியவர்களும், பல புதியபுதிய வாய்ப்புகளும், சந்தர்ப்பங்களும் நாடு முழுவதும் உருவாக வேண்டும். எனவே, புத்தகம் விற்காமல் தங்கினால் அவற்றை நூலகத்திற்கு விற்கலாம். கவலை வேண்டாம். இப்போது நம்மைப் பொறுத்தவரை நமது கவலையெல்லாம் உடனடியாக நமது புத்தகத்தைப் படிப்பவர்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதேயாகும். நூலகங்கள் பெரும்பாலும் புத்தகங்கள் வாங்கத்தான் செய்யும். இரண்டாவது பதிப்பு அச்சிட்டு கூட நூலகங்களுக்கு விற்று விடலாம், கவலை வேண்டாம்.

(10) அடிக்கடி கட்டாயமாக காரைக்குடி சென்று புத்தக விற்பனையைக் கண்காணிக்க வேண்டும். புத்தகம் விற்ற பணத்தை வாங்கி விட வேண்டும் என்று புத்தகம் அச்சிடுவதற்கு முன்பே பலமுறை குருதேவர் உங்களிடம் கூறியிருக்கிறார். ஏனெனில், காரைக்குடி சன்னிதானங்கள் அனைவருமே சுறுசுறுப்பு இல்லாதவர்கள், பொறுப்பில்லாத விளையாட்டுப் பிள்ளைகள் போன்றவர்கள் என்பதுதான் குருதேவரின் கருத்து.

(11) ஜனவரி மாதம் 7 அல்லது 8 தேதிக்குள் காரைக்குடி சென்று முழுமையாக விற்காத புத்தகங்களை வாங்கி வந்து விடுங்கள்.

தலைமைப்பீடத்திலிருந்து விற்காத புத்தகங்களைக் கொண்டு வருகிறோம் அல்லது மதுரைக்கு அனுப்பி விடுகிறோம். குருதேவர் என்னை 12ஆம் தேதி வெள்ளிக்கிழமை இரவு இரயில் மூலமோ பேருந்து மூலமோ மதுரை வந்து சேரும்படி செய்து விடுவார். 13ஆம் தேதி மதுரையிலிருந்து நாம் குறைந்தது இரண்டு மூன்று பேர் சபரி மலைக்கு செல்கிறோம். அங்கு அகில பாரத ஐயப்ப சேவா சங்கத்தின் இடங்களிலும், மற்ற இடங்களிலும் இருந்து தங்கி ஒவ்வொரு ஐயப்ப பத்தரிடமும் நமது புத்தகத்தைப் பற்றிக் கூறி புத்தக விற்பனையில் ஈடுபடுவோம். புத்தகத்தை வாங்குகின்ற ஐயப்ப பத்தர்கள் கட்டாயமாக புத்தகத்தைப் படிப்பார்கள். அப்படிப் படிப்பவர்கள் கட்டாயமாக குருதேவரோடும், நம்மோடும் தொடர்பு கொள்வார்கள். எனவே, நம்மால் முடிந்தவரை 5000 புத்தகத்தையும், ஐயாயிரம் மனிதர்களிடம் நேரில் ஒப்படைத்தேயாக வேண்டும். அதில் சில நூறு பேராவது நமக்கு ஆதரவாளர்களாக கிடைத்திடுவார்கள்! கிடைத்திடுவார்கள்!! கிடைத்திடுவார்கள்!!! கிடைத்தே ஆவார்கள்!!!! அதன்மூலம்தான் நமது வருங்கால செயல்திட்டங்கள் அனைத்தும் பொதுமக்களை சென்றடையும்.

(12) தங்களுடைய மன ஆறுதல்களுக்காவது விரிவான அஞ்சல் எழுத வேண்டும் என்பதால் குருதேவரின் திருவுளக் கருத்துக்களை அறிந்து அவருடைய ஒப்புதலோடு இந்த நெடிய அஞ்சல் எழுதப்படுகிறது. எனவேதான், இந்த அஞ்சலின் இறுதியில் தங்களுக்கும், தங்களது குடும்பத்தார்களுக்கும், நமது நிறுவன நிர்வாகங்களைச் சேர்ந்த சன்னிதானங்களுக்கும் நலம் விசாரித்து குருதேவரின் வாழ்த்தை தெரிவிக்கின்றேன். இதை தவறாக கருத வேண்டாம். இந்த அஞ்சலை அன்புகூர்ந்து நம்மவர் அனைவருக்கும் படித்துக் காட்டுங்கள்.

(13) இந்த அஞ்சலுக்கும், இதனுடன் அனுப்பப்படுகின்ற அஞ்சல்களுக்கும், ஏற்கனவே முருகேசனுக்கு அனுப்பியுள்ள

அஞ்சல்களுக்கும் கையெழுத்து பிறதிகளோ (அல்லது) இயந்திர நகல்களோ தயாரித்து நம்மவர்களுக்கு அனுப்புவதோடு; பொன்னேரிக்கும், அம்பத்தூருக்கும் ஐம்பது நகல்களாவது (50 வரை) அனுப்பி வைத்தால் நமக்கு கிடைத்து வருகின்ற புதிய ஆதரவாளர்களுக்கு எல்லாம் அவற்றை அனுப்பி விடலாம். புத்தக விற்பனைக்கிடையில் நகல்கள் எழுத ஓய்வு இருக்காது என்பதால் முடிந்தவரை சிறுகச் சிறுக அனுப்பவும்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்.

(ஒப்பம்) **சித்தர் அம்பலக்கூத்தர்**
**24-12-1994.**

நகல் தயாரிப்பு:-

திருவோலை படியெடுக்கும் நாயகம்,
அருள்மிகு பாலையம்பட்டி மாலையம்மன் சன்னிதானம்,
சித்தரடியான் மா. திவாகர்.

**//உண்மை நகல்//**
**//மூலம்: சித்தரடியான் மா. திவாகர் அவர்களின் கையெழுத்தில் இருந்திட்ட நகல்.//**

# இந்துக்களைக் காப்பாற்றும் ஆற்றல் தமிழ்மொழியில்தான் இருக்கிறது!

பொன்னேரி,
10-02-1995.

அன்புக்கும் ஆசைக்குமுரிய மகன்,
திருவோலை படியெடுக்கும் நாயகம்,
திருமங்கலம் சங்கிலிச்சாமி சன்னிதானம்,
சித்தரடியான் அ.த. முருகேசனுக்கு;

(1) உன் ஞானத்தந்தை குருதேவர், தலைவர், அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியார் தமது கைப்பட வரையும் திருவோலை.

யாவும் நலமாகட்டும், வெற்றியாகட்டும், உண்மையாகட்டும், பயன் தரட்டும்.

(2) உன் தம்பி வெங்கடேச பிரபுதான் பலமுறை என்னிடம் கடலலை போல் தொடர்பு கொள்ள முயன்று வெற்றி பெற்றான். அடுத்து, நீயும் கிடைத்தாய். நீங்களிருவரும் ஊழ்வினைத் தொடர்பு; பல யுகங்களில் உறவு, உரிமைச் சுற்றம், அடியான், தொண்டன், மாணுக்கன், வாரிசு .... என்று பல்வேறு வழிவகைகளில் எம்மோடு இரண்டறப் பின்னிப் பிணைந்து கலந்து வாழுகிறீர்கள். உங்களிருவரின் திருத்தோற்றம்; உங்களால் தமிழ்நாடு, தமிழினம், இந்துவேதம், இந்துமதம், இந்தியா, இந்தியர்கள், உலக மக்கள், அருள் துறை .... முதலியவை பல நிலையான பயன்களைப் பெற்றேயாக வேண்டும்.

(3) நீங்கள் தொடர்பு கொண்டுள்ள அனைவருக்கும், நமது சன்னிதானங்களுக்கும், அன்னூர் குடும்பத்தார்க்கும் எமது வாழ்த்தை, அன்பை தெரிவித்துக் கொள்கிறோம் யாம். குறிப்பாக, இந்துவேதம் பரப்பும் நாயகம், சித்தர் வேதகணநாதர் சித்தரடியார் த. கேசவன் அவர்கள், இந்துமதம் பாதுகாக்கும் நாயகம் சித்தர் உருத்திர தேவர் ச. துரைராசன், மாதண்டநாயகம் சித்தர் முத்தீசர் வெ. செகதீசன், அருட்பணி விரிவாக்கத் திட்ட அமைப்பாளர் சித்தர் கொங்கணர் இராம. செல்லம் ஆகிய நால்வரையும் விழியாக, வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக ஏற்றுச் செயல்பட்டிடுங்கள். நீயும், வெங்கடேச பிரபுவும் இளைய தலைமுறையினரை நிறுவன நிர்வாகக் கட்டமைப்புப் பெறச் செய்ய வேண்டும். இவை குறித்து, உன்னோடும் உன் தம்பியோடும் நிறையப் பேச வேண்டும். குறைந்தது இரண்டு நாட்களாவது ஓய்வு பெற்று வாருங்கள். <u>முன்னறிவிப்புச் செய்து; ஒப்புதல் பெற்று வருக</u>!

(4) அங்கு, நமது, இந்துவேதம் பரப்பும் நாயகத்திடம் நெருக்கமாக உள்ள நாகசங்கர், குணசேகர், பிரபாகரன், திவாகர், மாரிக்கனி, உப்பு மாரிக்கனி .... முதலிய அனைவரையும் பற்றிய பழம்பிறப்புக் கணிப்புகள் இன்னும் நிறைவு பெறவில்லை. அதேபோல், இவர்களும் தங்களை முழுமையாக அறிய, உணரக் காலதாமதம் ஆகிறது. --- எனவேதான், அவர்களைக் குருபீடத்துக்கு அழைக்கவில்லை. இன்றைய நிலையில் நீயும், உன் தம்பியும் குருபீடம் வந்து செல்ல முயலுங்கள்.

(5) அன்பு மகனே! நம் நாட்டில் படிப்பறிவு இல்லாததால், வெறுமையுற்றுக் கிடப்பவர்கள்; வறுமையால், வெறுமையுற்றுக் கிடப்பவர்கள்; தன்னலவெறியால், வெறுமையுற்றுக் கிடப்பவர்கள்; பேராசையால், வெறுமையுற்றுக் கிடப்பவர்கள்; பிறரை விடத் தனது நிலை தாழ்ந்திருப்பதை எண்ணியெண்ணி ஏங்கி, வெறுமையுற்றுக் கிடப்பவர்கள்; பிறரின் ஆக்கம் கண்டு பொறாமைப்பட்டு எரிச்சலுற்று, வெறுமையுற்றுக் கிடப்பவர்கள்; தன்னம்பிக்கையின்மையால் தளர்ந்து,

வெறுமையுற்றுக் கிடப்பவர்கள்; கோழைத்தனத்தால் அஞ்சியஞ்சி, வெறுமையுற்றுக் கிடப்பவர்கள்; குடும்பத்துக்குள் உள்ளவர்களைச் சமாளிக்க முடியாமல் மனம் வெந்து, வெறுமையுற்றுக் கிடப்பவர்கள்; குடும்பத்து உறவினர்களோடு போராடிப் போராடிச் சிந்தை நொந்து, வெறுமையுற்றுக் கிடப்பவர்கள்; சமுதாயத்தாரோடு அல்லது கிராமத்தாரோடு அல்லது, வட்டாரத்தாரோடு ஒத்துப் போக முடியாமல் சிரமப்பட்டு வருந்தி வருந்தி, வெறுமையுற்றுக் கிடப்பவர்கள்; நோய்களுக்குப் பயந்து, வெறுமையுற்றுக் கிடப்பவர்கள்; தங்களுடைய சொத்துக்களைத் தங்களுடைய வாரிசுகளால் காப்பாற்ற முடியாமல் போய்விடுமோ என்ற கலக்கத்தால், வெறுமையுற்றுக் கிடப்பவர்கள்; பிறரின் உண்மையான அன்புக்காகவும், பற்றுக்காகவும், பாசத்துக்காகவும் ..... ஏங்கியேங்கி, ஏமாந்து ஏமாந்து, வெறுமையுற்றுக் கிடப்பவர்கள்; தேவைக்கு மேல் நிறைய வசதிகள் இருப்பதால், என்ன செய்வதென்று தெரியாமல் சோம்பலால், வெறுமையுற்றுக் கிடப்பவர்கள்; மரணத்தை எண்ணிக் குலைநடுக்கமுற்று, வெறுமையுற்றுக் கிடப்பவர்கள்; பிறருக்குத் தெரியாமல் செய்த குற்றங்களை எண்ணிக் குலைநடுங்கி, வெறுமையுற்றுக் கிடப்பவர்கள் .... என்று எண்ணற்ற வகைகளில் வெறுமையுற்றுக் கிடப்பவர்கள் மிகுதியாக, மிகுதியாக இருக்கிறார்கள்.

(6) இப்படி, வெறுமையுற்றுக் கிடப்பவர்களுக்குத் தாலியாக, வேலியாக .... வாழ்பவர்கள்தான் அப்பாவிக் கூலிகளும், அகம்பாவப் போலிகளும். இந்த <u>அவலநிலைகள் நமது தாய்த்திரு நாட்டின் சொந்த நிலைகளா? அல்லது வந்த நிலைகளா?</u> ..... என்பதைப் பற்றிச் சிந்திக்கக் கூடிய இளைஞர்களை; விரல்விட்டு எண்ணக் கூடிய அளவிலாவது தேடிப் பிடித்து; ஒன்று சேர்த்து; நமது 'மனுநீதிக் கருத்துக்களை', 'இந்துவேதக் கருத்துக்களை', 'இந்துமத வாழ்வியல்களை' .... தெரிந்து, அறிந்து, ஆராய்ந்து, புரிந்து, தெளிந்து,

உணர்ந்து, நம்பி, ஒப்புக்கொண்டு, ஏற்றுச் செயலாக்கும்படி செய்ய வேண்டும்.

(7) அதற்காகத்தான், ஓரளவாவது, என்னை விரும்புகிறவர்களை, மதிக்கிறவர்களை, ஏற்றுக் கொள்கிறவர்களை .... அஞ்சல் வழியாகச் சந்திக்கவும்; நேரில் நெஞ்சம் திறந்து சந்திக்கவும் முயலுகிறேன்.

(8) அன்பு மகனே! எனக்கென்று சுயநலம், ஆசை, விருப்பம், தேவை, எதிர்பார்ப்பு .... ..... என்று எதுவும் இல்லை. ஆனால், மிகப்பெரிய படிப்பாளி, சிந்தனையாளர், சீர்திருத்தவாதி, புரட்சியாளர், .... என்ற சிறப்புகளுக்குரிய எந்தை, முடிகண்ட சோழபுரம் காக்காவழியன் பண்ணையாடி, பெரியகுளத்து ஐயா, சித்தர் காகபுசுண்டர், ம. பழனிச்சாமி பிள்ளை அவர்கள்;

"...... மகனே! தஞ்சைப் பெரியகோயிலைக் கட்டிச் செயல்பட்டிட்ட உன் தாத்தா, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்; மனம் நொந்து, சிந்தை நைந்து இந்துக்களை ஒற்றுமைப்படுத்த முடியாமல்; இந்துவேத நூல்களையும், இந்துமத நூல்களையும், இவற்றுக்கு முன்னோடியான மனுநீதி நூல்களையும் மக்களைச் சென்றடையச் செய்ய முடியாமல் ..... நிலவறைக்குள் நீள்தவத்தில் ஆழ்ந்திட்டார். அதற்குப் பிறகு ஆயிரமாண்டுகள் ஆகியும் நம்மவர்கள் எடுத்த முயற்சிகளெல்லாம் ...... பாலைவனத்து மழையாகி விட்டன. எனவே, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாக, ஆதிசிவனாரின் நேரடிக் குருபாரம்பரிய வாரிசாக, இந்துவேத நாயகமாக, இந்துமதத் தந்தையாக, பரப்பிரம்மமாக, குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் என்று பீடமேறியுள்ள நீயாவது; இந்துக்களைக் காப்பாற்றியாக வேண்டும் .... <u>இன்றைக்கு இந்தியா முழுதுமுள்ள இந்துக்களைக் காப்பாற்றும் ஆற்றல் தமிழகத்தில்தான் இருக்கிறது; தமிழர்களிடம்தான் இருக்கிறது; தமிழ்மொழியில்தான் இருக்கிறது.</u> .....

<u>இப்பேருண்மையை, முதலில் தமிழர்களுக்குப் புரியவைத்துப் பிறகு செயலாற்றிடப் புறப்படு!</u>...."

என்று ஆணையிட்டுச் சென்றதை எண்ணித்தான்; மிகமிகப் பொறுமையாகவும், நிதானமாகவும் செயல்பட்டு வருகிறேன். எனக்குத் துணையாகச் சிலர்தான் கிடைத்துள்ளார்கள். **<u>இச்சிலர்தான், என்னை வாழ வைத்து வருகிறார்கள்</u>**.

(9) என்னை வாழவைக்கும் எனது ஏற்புச் செல்வர்கள், அன்பு மகன்கள் .... என்னைப் பாதுகாப்பதில் மிகுந்த அக்கரையோடும், ஆர்வத்தோடும், எச்சரிக்கையோடும், ஆதங்கத்தோடும் இருக்கிறார்கள். எனவேதான், யாம், எமது சுற்றுப்பயணங்களைக் குறைத்துக் கொண்டு; அனைவரையும்; எமது இருப்பிடத்துக்கு வரவழைத்துச் செயலாக்கம் புரிய முயலுகிறோம். இதற்காகவே, உன்னைச் சந்திக்க விரும்புகிறோம் யாம்.

(10) இதுவரை, திரட்டப்பட்டுள்ள நம்மவர்களுக்கிடையில்; ஒற்றுமையில்லை, தோழமை இல்லை, நட்பு இல்லை, ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளும் பழக்கமில்லை; எல்லோரும் ஒன்று கூடி அடிக்கடி கருத்துப் பரிமாற்றக் கலந்துரையாடல்களை நிகழ்த்த வேண்டுமென்ற முயற்சியில்லை. இவற்றுக்கு மேல் நம்மவர்களில், பெரும்பாலானவர்கள்; மௌடீகம் உடையவர்களாக, மனந்திறந்து பேசாதவர்களாக; தங்களுக்கென்று கற்பனையான, அகம்பாவ, ஆணவ, வீம்புகளை உடையவர்களாக; பிறரை மதிக்காதவர்களாக, தங்களுக்கென்று குழு சேர்த்துப் பிரிந்து நிற்பவர்களாக ..... இருக்கிறார்கள்.

(11) பொதுவாக பதினெண்சித்தர் பீடாதிபதிகள், பதினெண்சித்தர்கள், நாற்பத்தெட்டு வகைச் சித்தர்கள் அனைவருமே! .....

(i) "தன்னையறியும் அறிவே மெய்யறிவு
பின்னை யறிவு பேயறிவு."

(ii) "தன்னை யறிந்தால்தான் தலைவனை அறியலாம்
தலைவனை யறிந்தால்தான் தன்னை அறியலாம்."

---- என்ற இரண்டு கருத்தை ஆணித்தரமாக வலியுறுத்துகிறார்கள். இக்கருத்தைப் புரிந்து கொண்டவர்கள் நம்மிடம் எத்தனை பேர்?!?!?! -----

(12) அன்பு மகனே! எமது அருளுரைகள் காற்றில் கரைகின்றன; செவிடன் காதில் ஊதிய சங்கொலியாகின்றன. யாம் அனுப்பும் நகல்களைப் பொறுப்பாகப் படிக்காமல் மதிப்புக்குரிய சொத்துக்களாகப் பாதுகாக்கும் நிலையே நீடிக்கிறது. எனவே, நமது, '<u>இந்துவேத நாயகம் பதிப்பகம்</u>' மூலம் நம்மிடம் உள்ள நகல்களை, இயந்திர நகல்களாகத் தயாரித்து; இருபது, முப்பது நகல்களை ஒன்று சேர்த்துப் புத்தகமாகத் (Binding) தைத்து; ரூ.20-00 விலையில் [பதிப்பக ஆதாயம் + செலவு] நம்மவர்களுக்கு விற்பதுடன்; புதியவர்களுக்கும் விற்க வேண்டும். ஏனெனில், எல்லாவற்றையும் அச்சிட நம்மிடம் பொருளாதாரம் இல்லை. மேலும், யாம், சித்திரை பிறந்தது முதல்; இந்து வேதாகம பாடசாலையை நேரடியாக நிகழ்த்த உள்ளோம். அப்பாடசாலைக்கு உங்களின் நகல்களின் தொகுதிப் புத்தகங்களை பாடப்புத்தகமாக விற்று விடலாம். இதுபற்றி, அனைவருடனும் கலந்து பேசுக. விரிவஞ்சி இத்திருவோலையை நிறைவு செய்கிறோம்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்

**அன்பு - சித்தர், தலைவர், குருதேவர், ஞானத்தந்தை,**
**அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்,**
**10-02-1995.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலம்: குருதேவர் அவர்களின் கைப்பட எழுதப்பட்ட அஞ்சலின் இயந்திர நகல் (Xerox copy).//**

# தமிழ்நாடுதான் இந்தியாவைக் காப்பாற்றும் திருநாடு

நாள்: 20-04-1995

அனுப்புநர்:

சித்தர் சட்டநாதர்,
பதினெண்சித்தர் மடம், அலுவலகம்,
3, N.G.O.நகர்,
பொன்னேரி - 601204.

பெறுநர்:

அருள்மிகு உதிரக்கருப்பு சன்னிதானம்,
த. உலகதாசன்,
கரையாம்பட்டி, ஆவாரம்பட்டி அஞ்சல்,
பூதலூர் (வழி), திருச்சி மாவட்டம்.

த. உலகதாசன் அவர்களே! தாங்கள் சித்தர்களின் நெறிகள், தத்துவங்கள், செயல்சித்தாந்தங்களை விளக்கி செயல்பட்டு வருவதை அறிந்து குருதேவர் அகமகிழ்ந்து பாராட்டி தங்களை வாழ்த்துகிறார்.

ஐயா! உலக ஊழியர் மீது பற்றும், பாசமும், நம்பிக்கையும், மரியாதையும் வைத்துள்ளதால், குருபீடம் உம்மை முழுமையாகத் தேர்ந்தெடுத்து முழுநேர ஊழியராகவும், இயக்கச் சொற்பொழிவாளராகவும் மாற்றிட இருக்கிறார்.

தாங்கள் சித்தர்களைப் போல தாடி மீசை வைத்திருப்பதால் இந்துவேதத்தைப் பரப்பவும், இந்துமதத்தைச் செயலாக்கிக் காட்டவும்

உங்களை அருளாற்றல் மிக்க சன்னிதானமாகவே உருவாக்கிட குருதேவர் திட்டமிட்டுள்ளார். ஆனால், சித்தர் தாண்டவராயக்கோன் போல் நீயும் ஏதாவது தவறு செய்து விடுவாயோ என்று குருபீடம் யோசித்த போது நாங்கள் தங்களைப் பற்றி நல்ல செய்திகளைக் கூறி தங்களை நம்பலாம்; தேர்ந்தெடுக்கலாம் என்று உறுதியளித்துள்ளோம்.

(5) உலக அளவில் தமிழகம், தமிழன், தமிழ்மொழி ஆகிய இம்மூன்றும் தெரிவதற்கும்; இந்திய அளவில் இம்மூன்றும் சிறப்படைவதற்கும் தலைமைச் சத்திகளாய் இருப்பது இந்துவேதம் ஒன்றுதான். ஏனென்றால், ஆதிசிவனாரும் அவர் மகன் முருகப் பெருமானாரும் முறையே தோற்றுவித்த இருக்கு வேதம், அசுர வேதம், அதர்வான வேதம், யாம வேதம் எனும் நான்கு வேதங்களும், அவற்றிற்குரிய 396 நூல்களும், 4,42,368 சூலகங்களும், இந்துமதத்திற்குரிய 36 நூல்களும், இவையனைத்துக்கும் அடிப்படையான 18 மனுநீதி நூல்களும், இவற்றிற்குரிய 18 இலட்சம் சுருதிகளும், மனு தர்ம சாத்தர சாத்திர சாத்திறங்களும், நெறிகளும், முறைகளும், மரபுகளும், ஒழுகலாறுகளும், ... இவையனைத்துமே அருளூறு அமுத தெய்வீக செம்மொழியான முத்தமிழ் மொழியில்தான் அண்டபேரண்டங்கள் அனைத்திலுமே அருளாட்சி புரிகின்ற அருளாட்சி மொழியாக இருக்கிறது. அதாவது வண்டமிழ் மொழி, ஒண்டமிழ் மொழி, பைந்தமிழ் மொழி, செந்தமிழ் மொழி, கன்னித் தமிழ் மொழி, தீந்தமிழ் மொழி, அமுதத் தமிழ் மொழி ... என்றெல்லாம் இலக்கியக் கலைஞர்களால் பாராட்டப்பெறும் முத்தமிழ் மொழிதான் வேதமொழியாக, தேவமொழியாக, தெய்வமொழியாக, கடவுள்மொழியாக, ஆண்டவர் மொழியாக, பத்திமொழியாக, சத்திமொழியாக, சித்திமொழியாக, முத்திமொழியாக ... அருளை அநுபவப் பொருளாக மருந்தாகவும், விருந்தாகவும் உருவாக்கித் தரக்கூடிய அருள்மொழியாக,

திருமொழியாக, தருமொழியாக, கருமொழியாக, குருமொழியாக விளங்குகிறது.

(6) 64 முறை திருவிளையாடல்கள் புரிந்த சிவபெருமான்களில் ஒருவர் கூட தமிழ்மொழியைத் தவிர வேறு மொழியைப் பேசவில்லை. 63 நாயன்மார்கள், 12 ஆழ்வார்கள், 96 தொகையடியார்கள் அனைவரும் தமிழ்மொழியில்தான் செயல்பட்டிருக்கிறார்கள்... இவை போன்ற கருத்துக்களை மட்டும்தான் தாங்கள் பேச வேண்டும். இல்லையேல் ஆபத்துக்கள், சிக்கல்கள் வந்து விடும்.

(7) தாங்கள் வளர வேண்டியவர். தங்கள் மூலம் பல நிறுவன நிர்வாகங்கள் வளர வேண்டும். தாங்கள் உலக ஊழியர் கண்ட கனவுகள் நனவாகிட (i) தமிழ்மொழி காத்திட, வளர்த்திட, உரிமை பெற்றிட, ஆட்சி பெற்றிட, (ii) தமிழினம் தன்மானம் பெற்றிட, தன்னம்பிக்கை பெற்றிட, ஒற்றுமை பெற்றிட, மொழியினப் பகைவர்களை வென்றிட, (iii) தமிழ்நாடு இந்தியாவைக் காப்பாற்றும் திருநாடு, இந்திய ஒற்றுமைக்குரிய உத்திகளையும் சத்திகளையும் தரக்கூடிய நாடு, தெய்வீகத் திருநாடு, இந்துவேதம், இந்துமதம் பிறந்த நாடு, வாழ்ந்த நாடு என்ற இம்மூன்று கொள்கைகளுக்காக, குறிக்கோள்களுக்காக குனிந்தும், கும்பிட்டும், வளைந்தும், நெளிந்தும், பதுங்கியும், ஒதுங்கியும், மறைந்தும், ... மிக நுட்பமாக செயல்பட்டேயாக வேண்டும். அதாவது வறட்டுப் பேச்சோ, முரட்டுச் செயலோ கூடாது, கூடாது, கூடாது, கூடவே கூடாது.

(8) தாங்கள் குருதேவரால் இறுதிச் சடங்குகள் அனைத்தும் தமது கைப்பட செய்யப்பட்ட பெரும்புலவர், தமிழறிஞர், உலக ஊழியரின் வாரிசு, பேரன் என்ற தகுதியை தங்களுடைய ஒவ்வொரு பேச்சிலும், மூச்சிலும், சொல்லிலும், செயலிலும் வெளிப்படுத்த வேண்டும். அதற்குரிய <u>பக்குவம்</u>, <u>அடக்கம்</u>, <u>பொறுமை</u>, <u>நிதானம்</u>, <u>தெளிவு</u>, <u>எளிமை</u>, <u>இனிமை</u>, <u>கனிவு</u>, ... முதலிய பண்புகள் அனைத்தையும்

தங்களுடன் வளர்த்துக் கொள்ள வேண்டும். இவை அனைத்தும் குருவருளால் தங்களுக்குச் சித்திக்கும்.

(9) நமது குருதேவர் ஒருவரை மகனே! என்று அழைத்தால் உடனே அவர் அருளுலகத்தில் குருதேவரின் மகனாக, வாரிசாக ஏற்றுக் கொள்ளப்படுவார். அத்துடன் எல்லாவிதமான அருளுலக பொருளுலகப் பாதுகாப்புகளையும் பெறுவார்கள்.

(10) நமது குருதேவரால் எத்தனை ஆண்டு காலம் தம்மிடம் தயாரானவர்களாக இருந்தாலும்; எத்தகைய மிகச் சிறந்த பேராற்றல்கள் பெற்றிருந்தாலும், ... "அவர்கள் தவறு செய்ய நேர்ந்தால், துரோக விரோதச் செயல்களில் ஈடுபட்டால், பொறுப்பின்றி பொறுமையின்றிச் செயல்பட்டால் ... அடுத்த நொடியே குருதேவரிடமிருந்து முழுமையாகப் பிரித்தெடுக்கப்பட்டு அருளுலகிலும், பொருளுலகிலும் அறிவிக்கப்பட்டு சாதாரணமானவர்களாக ஆக்கப்பட்டு மனித விலங்காக வாழ நேரிட்டுவிடும்".

(11) நமது குருதேவர் நான்கு உகங்களாக இருந்து வருகின்ற இந்துவேதம், இந்துமதம் பிழைக்க தழைக்க அழைக்கிறார், தங்களைப் போன்ற இளைஞர்களை, சிறுவர்களை. ஏனென்றால் முற்றிய மரத்தை வளைக்க முடியாது. அதாவது எந்தவிதமான நிறுவன நிர்வாகங்களுக்கும், தனிமனிதர்களுக்கும் அடிமையாகாமல் துணிந்து தன்னம்பிக்கையோடு செயல்படும் தன்னம்பிக்கை மிக்க சிறுவர் சிறுமி இருபால் இளைஞர்கள் அல்லது உலக வாழ்வியல்களில் ஒதுங்கியிருக்கும் முதியவர்கள், பெரியவர்கள், கிழவர்கள், ... முதலியவர்களைத்தான் குருதேவர் தேடிக் கொண்டிருக்கிறார். அதாவது துரு பிடித்த இரும்புகளை உருக்கி மீண்டும் புதிய இரும்பாக்கும் இரும்பால் போர்வாள்கள் அடிக்கப்படுவது இல்லை. மண்ணிலிருந்து எடுக்கப்படும் இரும்புத் தாதுக்களால் உருவாகிடும் புதிய இரும்பினால்தான் போர்வாள்கள் அடிக்கப்படுகின்றன. அதுபோல், நம் நாட்டிலுள்ள சிறுவர்களையும்,

சிறுமியர்களையும் தேவைப்பட்டால் பாலுகர்களை (பாலகர்), ... அதிகமாக ஏற்று பயிற்றுவித்து அருட்படையைத் தயாரிக்க வேண்டும். அப்பொழுதுதான் நம்மிடையே (i) போலிகள், (ii) காலிகள், (iii) கைக்கூலிகள், (iv) காட்டிக்கொடுக்கும் கருங்காலிகள், (v) அன்னிய கைக்கூலிகள் (vi) அன்னியரின் கங்காணிகள், (vii) நம்மிடையே உள்ள துரோகிகள், (viii) நம்மிடையே உள்ள விரோதிகள் ... முதலிய எட்டு வகைப்பட்டவர்களையும் முதலில் முறியடித்து நம்மவர்களுக்கு முறையான அறிவையும்; அதாவது ஏட்டறிவையும், நிறைவான பட்டறிவையும், செயல்முறை பயிற்சிகளையும் வழங்கி; அருளாட்சி மொழியான தமிழ்மொழி மீது பற்றும், அருளுலக மூலவர்களான தமிழர்களின் உரிமையுணர்வும், இன உணர்வும், தன்னம்பிக்கையுணர்வும், இந்துவேத இந்துமதத் தாயகமான தமிழகத்திடம் நாட்டுப்பற்றும் ... பெற்றுத் திகழும்படிச் செய்ய வேண்டும்.

(12) இதற்காக தாங்கள் கிராமம் கிராமமாக, தெருத் தெருவாக, குடிசை குடிசையாக செயல்பட வேண்டும் (Field Work). தங்களை செயல் நடைமுறைத் தலைவர்களுள் ஒருவராக (Field Marshals) தயாரித்திட குருதேவர் முடிவெடுத்துள்ளார். தங்கள் மூலமாக தங்களைப் போல் பலர் தயாரிக்கப்பட்டாகிட வேண்டும்.

(13) இமயத்தின் விளிம்பு முதல் கன்னியாகுமரி கடலடி மணற்பரப்பு வரை உள்ள மக்களை முதலில் தாங்கள் இந்துக்களாக உணரும்படி செய்ய வேண்டும்; தன்னம்பிக்கையும், தத்துவத்தில் நன்னம்பிக்கையும் பெறுமாறு செய்ய வேண்டும். இதற்கு முதற்கட்டமாக இந்துவேத மொழி, இந்துமத மொழி, மனுநீதி மொழி, அருள்மொழி, அருளாட்சி மொழி, தேவமொழி, தெய்வமொழி, கடவுள்மொழி, ... என்ற உரிமையையும் பெருமையையும் உடைய தமிழ்மொழியை செப்பனிட வேண்டும். மக்கள் செம்மையாக உணரும்படிச் செய்ய வேண்டும். "யாராக இருந்தாலும் அவர்கள் தமிழ்மொழியை ஏற்றுக் கொண்டால்

அவர்கள் தமிழர்களே” என்ற ஆதிசிவனுரின் கொள்கைப்படியே தமிழகத்திலுள்ள அனைவரையும் தமிழர்களாக்கிட வேண்டும்.

(14) அதாவது அரசியல்வாதிகளைப் போல், இலக்கியவாதிகளைப் போல், ... ஒருசில சமயவாதிகளைப் போல், சமுதாய சீர்திருத்தவாதிகளைப் போல் ... மேலோட்டமாக தமிழ்ப்புலமை பெற்று ... அதன்மூலம் தமிழை விற்று பட்டம், பதவி, பணம், புகழ், ... சேர்த்தற்குரிய நயவஞ்சகர்களை நமது அருட்படையில் சேர்த்து விடக் கூடாது.

(15) தமிழகம் முழுவதுமுள்ள கோயில்கள் அனைத்தையும் புத்துயிர்ப்புச் செய்ய வேண்டும். புதுப்பொலிவு பெறச் செய்ய வேண்டும். இந்துவேத முறையில் (i) திருமுறை, (ii) தருமுறை, (iii) குருமுறை, (iv) கருமுறை, ... எனும் நான்கு முறைகளிலும் எல்லாக் கோயில்களிலும் பூசைகள் நடக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். பத்தர்களாக பகல்வேடம் போடுகிறவர்களை திருத்த வேண்டும் அல்லது திருத்தி ஒதுங்கும்படிச் செய்ய வேண்டும்.

(16) இவற்றிற்கெல்லாம் முதல்கட்டமாக தங்களை உடனடியாக அருள்மிகு தாத்தா அமராவதியாற்றங்கரைக் கருவூரர் திருமுன்னர் அறிவிப்பு செய்து சித்தரடியாராக தயாரிக்க ஞானவேந்தர், அருட்கொடை வள்ளல், இந்துவேத இந்துமத தலைமை ஆச்சாரிய குருபீடம், குருமகா சன்னிதானம், அந்தணர் அண்ணல், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்கள் திருவுளச் சம்மதம் பெற்று குருவாணை வழங்கியுள்ளார்.

(17) சித்தர் சட்டநாதராகிய யாம் எமது பணிகளையெல்லாம் விட்டுவிட்டு முழுநேர ஊழியராக “இந்துவேத விடுதலை முழக்கப் பணி; இந்துமத மறுமலர்ச்சிப் பணி; அருட்பணி விரிவாக்கத் திட்டம் ...” முதலியவற்றிற்காக முழுநேர ஊழியராகி விட்டோம். அன்று முதல் அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியார் அவர்கள் பல

வட்டாரங்களுக்கும், தங்களைப் போன்ற தனிமனிதர்களுக்கும் அருள்வாக்காக திருவாய் மலர்ந்தருளும் "குருவாசகங்கள்" எம் போக்கில் வடிவமைப்புச் செய்து அஞ்சல் வழிக் கட்டுரைகளாக எழுதச் செய்து வருகிறார். அதன்படியே அவரது அருள்வாக்கை, அருள்வாக்கியத்தை, அருள்வாசகத்தை ... தங்களுக்கேற்ற வண்ணம்; கூடுமானவரை அவருடைய சொற்களாலேயே 'கட்டுரை அஞ்சலாக' இதை எழுதுகிறோம்.

(18) யாம் உம்மிடம் கொடுத்த **'இந்துவேதச் சிந்தனைகள்'** புத்தகத்தை முழுமையாக படித்துப் புரிந்து கொண்டால் போதும். அடுத்து இந்தக் கட்டுரை அஞ்சலை ஒரு நாளைக்கு குறைந்தது இரண்டு முறையாவது நல்ல நினைவோடு படித்திடல் வேண்டும்.

(19) அன்பு உலகதாசனே! இந்த கட்டுரை அஞ்சல் நமது இந்துவேத முன்னேற்ற கழகத்திலுள்ள முன்னணி செயல்வீரர்கள் அனைவருக்கும் இயந்திர நகல் (Xerox) எடுக்கப்பட்டு உமக்கும் அவர்களுக்கும் ஒரே நேரத்தில் அனுப்பப்படுகிறது. எனவே, இதன்மூலம் இ.மு.க.வினர் அனைவரும் உம்மைத் தெரிந்து கொள்வார்கள்; உம்முடன் தொடர்பு கொள்வார்கள். தாங்கள் தமிழகம் முழுதும் மின்னல்வேக சுற்றுப்பயணம் செய்யலாம். அதற்குரிய தரம், திரம், திறம், தீரம், வீரம், உரம், அறம், மறம், ஏட்டறிவு, பட்டறிவு, மனப்பக்குவம் ... முதலியவைகளை வளர்த்துக் கொள்ளலாம்.

(20) இவ்வஞ்சலைக் கண்டதும் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு சுற்றுப்பயணம் செய்ய 3 சிவப்பு வேட்டிகள், 8 முழம் மஞ்சள் கச்சை, மெய்ஞ்ஞானக்கொடி, தோளில் தொங்கும் பை - அதில் உமக்குத் தேவையான பொருட்கள் தயாரித்துக் கொள்ளுங்கள். தேவையான பொருட்களை தாங்கள் கரூர் வந்ததும் ஏற்பாடு செய்யப்படும். தாங்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு வந்தால் அவர் தங்களை சித்தர் நாவல்மரத்தடியார் அ. செயபாலகிருட்டிணனுடன்

தொடர்பு கொள்ள ஏற்பாடு செய்வார். தா.ஓ. இராமலிங்கம், சோனி எலெக்ட்ரானிக்சு, 222 திண்ணப்பா காம்பிளக்சு, கரூர் - 639001, தொலைபேசி 22268.

(21) தாங்கள் இந்த அஞ்சலைப் படித்தீர்கள் என்பதற்கு சான்றாக இதைப் போன்ற வெள்ளைத்தாளில் இந்த அஞ்சல் எழுதப்பட்டிருப்பதைப் போல் முன்பக்கத்தில் இருவிரல் அகலமுள்ள இடைவெளி விட்டு அதே இடத்தை பின்பக்கம் வலதுகைப் பக்கம் அப்படியே விட்டுவிட்டு இடது பக்க நுனியிலிருந்து எழுத வேண்டும். அப்போதுதான் உங்களுடைய நகலைக் கோப்பில் பாதுகாக்க முடியும். இந்த அஞ்சலுக்கு சில பேறு நகல்களை தொடர்ந்து எழுதிடுங்கள். ஏனென்றால் ஒருமுறை எழுதிப் பார்ப்பது என்பது பத்து முறை திரும்ப திரும்ப படிப்பதற்குச் சமம் என்பதுதான் குருதேவரின் கருத்து. அதன்படி குருதேவர் போதும் என்று சொல்லும்வரை தொடர்ந்து 20 அல்லது 30 நகல்களைத் தயார் செய்து பொன்னேரி முகவரிக்கு அனுப்பிக் கொண்டே இருங்கள். அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், 3, N.G.O. நகர், பொன்னேரி - 601204.

(22) எனவே, பல்வேறு அலுவல்கட்கிடையில் உன் பொருட்டு இவ்வளவு பெரிய நீண்ட கருத்துச் செறிவு மிக்க அஞ்சலை குருதேவர் அருளியிருப்பதை உணர்ந்து தெளிந்து முழுமையாக உம்மை குருதேவரிடம் ஒப்படைத்திடு. 'நீங்கள் குருதேவரின் கையிலிருக்கும் போர்வாள்தான்' என்ற தத்துவத்தை மறக்காதே, துறக்காதே. அப்போதுதான் குருவாணையின்படி உம்மால் செயல்பட முடியும். குருதேவர், தாம் சொல்வதை செய்யக் கூடியவர்களைத்தான் உருவாக்க நினைக்கிறார் என்பதை முழுமையாகப் புரிந்தவர்களால்தான் குருதேவரிடம் தொடர்ந்து செயல்பட முடியும். விரிவஞ்சி இத்துடன் அஞ்சலை நிறைவு செய்கிறோம்.

(23) யாமும் சித்தர் அம்பலக்கூத்தரும் உம்மீது வைத்துள்ள நம்பிக்கையை; உன் பொருட்டு குருதேவரிடம் வழங்கிய பரிந்துரையைக் காப்பாற்ற வேண்டுமென்ற கடமையுணர்வும், கட்டுப்பாடு உணர்வும், தன்னம்பிக்கை உணர்வும், நீதி உணர்வும், நேர்மையுணர்வும் ... உம்மிடம் வற்றுது ஊற்றெடுத்துக் கொண்டே இருக்க வேண்டும்.

அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே!

அனைத்தும் அம்மையப்பன்கள் திருவருளே!! குருவின் அன்பான ஆதரவே!!!

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

**அன்புடன்**
**சித்தர் சட்டநாதர்,**
**20-04-1995.**

**//உண்மை நகல்//**
**//பதினெண்சித்தர் திருச்சபை அறக்கட்டளை லெட்டர் பேடில் எழுதப்பட்ட அஞ்சலின் ஒளி நகல்.//**
**//இதன் மூலநகல்: கையெழுத்துப் பிறதியாக 6 பக்கங்கள் கொண்டதாக இருந்தது.//**

# நமது பொறுப்பு என்ன?

இந்து வேதத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு நமது சன்னிதானங்களின் தலை மேல், தோள் மேல், கை மேல் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது.

நாம் எல்லோரும் இந்து வேதத்தின் ஆசான்கள், ஆசிரியர்கள், ஆச்சாரியார்கள்.

எனவே, நமக்கு இந்து வேதத்தில் நம்பிக்கை இருக்க வேண்டும். நம்பிக்கை இருந்தால் இந்து வேத வழியில் வாழ்ந்து காட்ட வேண்டும். அதற்கு இந்து வேதத்தில் கூறியபடி நமது உடை, உணவு, தாடி, மீசை, முடி, தமிழ்மொழிப் பற்று, தமிழன் என்ற இன உணர்வு கொள்ள வேண்டும்.

தமிழ் நாடுதான் அருளுலகப் பொருளுலக தாயக கருவறை, உலைக் கலம், நாற்றுப் பண்ணை, நாற்றங்கால், விதைப் பண்ணை, பாடி வீடு, பாசறை, கோட்டை. அதாவது தமிழ்நாடு தமிழர்களுடைய நாடாக இருந்தால்தான் இந்துவேதத்தைக் காப்பாற்ற முடியும்.

தமிழ்நாடு என்கின்ற நாற்றங்காலில் தயாரிக்கப்படும் நாற்றுதான் இந்தியா என்னும் விளைநிலம் முழுவதும் நட்டுப் பயிரிட வேண்டும். இந்து வேதம் யாண்டும் பரவி உள்ளதே இந்தியா.

இந்தியா முழுவதும் உள்ள இந்துக்களுக்கு இந்து வேதக் கருத்துக்களை, இந்து வேதச் செய்திகளை, இந்து வேத வரலாறுகளை, இந்து வேத வாழ்வியல்களை, இந்து வேத நடைமுறைகளை, சாத்திர, சாத்திற, சாத்தரங்களை, மந்தர, மந்திர, மந்திறங்களை; இந்து வேதப் பூசைமொழிகளை, பூசை விதிகளை; இந்து வேதத் தத்துவங்களை, செயல் சித்தாந்தங்களை, இந்து வேத சடங்கியல்களை, இந்து வேத

சட்டதிட்டக் கட்டுப்பாடுகளை, ஒழுகலாறுகளை, நம்பிக்கைகளை, பழக்க வழக்கங்களை, இந்து வேதப் பயன்களை, இந்து வேதப் பத்தி சத்தி சித்தி முத்தி முறைகளை, தமிழ்நாட்டில் உள்ள தமிழர்கள்தான் இந்தியா முழுவதும் உள்ள இந்துக்களுக்கு கற்றுத் தரமுடியும்.

அதாவது, இந்து வேதம் தமிழில்தான் உள்ளது. தமிழனுக்குத்தான் சொந்தம். தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழன் ஒருவன்தான்; தமிழ்மொழி வழி, இன வழி இந்து வேதத்திற்கும், இந்து மதத்திற்கும் தலைவனாக, ஆசிரியனாக, ஆசானாக, ஆச்சாரியாராக, குருவாக, குருக்களாக, குருபீடமாக, குருதேவராக, மடாதிபதியாக இருக்க முடியும்.

**//பழனி பயிற்சி முகாமின் போது (16-09-1994) குருதேவர் வழங்கிய கருத்துக்களில் சில.//**





மெய்ஞ்ஞானக்கொடி



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி

12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

"..... இன்றைக்கு இந்தியா முழுதுமுள்ள
இந்துக்களைக் காப்பாற்றும் ஆற்றல்
தமிழகத்தில்தான் இருக்கிறது;
தமிழர்களிடம்தான் இருக்கிறது;
தமிழ்மொழியில்தான் இருக்கிறது. .....
இப்பேருண்மையை, முதலில் தமிழர்களுக்குப்
புரியவைத்துப் பிறகு செயலாற்றிடப் புறப்படு!...."

\- முடிகண்ட சோழபுரம் காக்காவழியன் பண்ணையாடி, சித்தர் காகபுசுண்டர், ம. பழனிச்சாமி பிள்ளை அவர்கள்

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://gurudevar.in
https://induism.org
https://books.gurudevar.org
https://gurudevar.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ15/-